## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை – 2016

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2018 சனவரி 17 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும், நிதி நிலைமைக்கூற்று, வருமானக்கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2

காசுப்பாய்ச்சல் கூற்றில் செலுத்தப்பட்ட வருமான வரியாக ரூபா 19,701,609 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பணமாகச் செலுத்தப்பட்ட வருமான வரி ரூபா 12,336,843 ஆனமையால் ரூபா 7,364,766 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3

(i) நியமத்தின் 44 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் நடப்பாண்டு காலப்பகுதியில் தாக்கம் ஒன்று ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டு மதிப்பீடொன்று மாற்றமடையும் தன்மை மற்றும் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், 2015 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வரி தொகையை விஞ்சி கிடைக்கப்பெற்ற ரூபா 7,285,607 தொகை நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியில் தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் விநியோகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்று தொகுதியின் தவறுகளும் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடுவதன் மூலம் (Restated) சரி செய்ய வேண்டி இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 2,589,072 தொடர்பாக அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7

நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் கணிப்பீடு செய்யப்படுமாயின் உரிய சொத்துக்களுக்குரிய தொகுதியின் சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டடங்கள் மீள் கணிப்பீடு செய்யப்படாமல் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் 2008 ஆம் ஆண்டின் போது மீள் கணிப்பீடு செய்யப்பட்டு ரூபா 1,378 மில்லியன் தொகையான மீள் கணிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய காணி மற்றும் கட்டிடங்கள் மீள் கணிப்பீடு செய்யப்படாமையினால் அதிகாரசபையின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 8

(i) நியமத்தின் 44 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிஏற்பாடாக இனங்காணப்பட்ட பெறுமதி அறிக்கை இடப்பட்ட திகதியில் உள்ள தற்போதுள்ள கடப்பாடுகளை தீர்க்கும் வகையில் தேவையான செலவினங்களில் சிறந்த மதிப்பீடாக இருக்க வேண்டும். எனினும், நிறுவனம் ரூபா 4,845,979 அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் ஒதுக்கீட்டின் போது கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மாத்திரம் கவனத்தில்

கொள்ளப்பட்டிருந்ததுடன் தனிப்பட்ட கடன்பட்டோர் மீதி தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த காலத்தில் ஏற்பட்ட விளைவுகளால் தற்போது பொறுப்பொன்று (சட்ட ரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட) காணப்படும் போது அதற்காக நிதிஏற்பாடு செய்திருக்க வேண்டும். எனினும் 2006 சனவரி முதல் 2016 யூன் வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தும் போது வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் பாதீட்டு விஷேட கொடுப்பனவுகள் கவனத்தில் கொள்ளப்படாமையின் காரணமாக பங்களிப்புப் பணமாக ரூபா 5,695,393 தொகை மற்றும் அதற்குரிய தண்டப்பணமாக ரூபா 2,786,538 ஆக கூட்டுமொத்தமான ரூபா 8,481,931 செலுத்த வேண்டி இருந்தமை 2017 பெப்ரவரி 16 ஆந் திகதியளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பான நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(iii) நியமத்தின் 100 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கை இடப்பட்ட திகதியில் உள்ள சகல நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்த வேண்டும். 2006 சனவரி முதல் 2016 யூன் வரை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் பாதீட்டு விஷேட படிகள் கவனத்தில் கொள்ளப்படாமல் பங்களிப்புப் பணம் கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக மேலும் ஊழியர் பங்களிப்புப் பணமான ரூபா 18,129,721 தொகை மற்றும் சேவை வழங்குனர் பங்களிப்பு பணமாக ரூபா 27,194,581 தொகை மற்றும் அதற்குரிய மிகைக் கட்டணமாக ரூபா 22,249,365 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 67,573,667 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டியமை வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 2,809,068 தொகையான அனுமதிப்பத்திரம் மற்றும் நிர்வாகக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்குரிய அட்டுறு செலவினங்களின் மிகை ஒதுக்கீடுகள் ரூபா 8,325,722 தொகை முன்னைய ஆண்டு சீராக்கமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடப்பாண்டின் எனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் நடப்பாண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட தற்போது பாவனையிலுள்ள ரூபா 99,821,327 தொகையான 09 வகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்திருந்ததுடன் அவற்றை மீள் கணிப்பீட்டுக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையினால் ஏனைய நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அபிவிருத்தி கிரயமாக இனங்காணப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு

செய்யப்பட்டு 10 சதவீதப்படி வருடாந்த பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த சொத்துக்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு சட்டரீதியான உரித்தொன்று மற்றும் அதிகாரமொன்று காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த சொத்துக்களுக்குரிய கிரயமாக ரூபா 184,592,443 தொகை மற்றும் அவற்றின் தேறிய பெறுமதியாக ரூபா 33,016,065 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு உரித்து மற்றும் சொந்தம் அதிகாரசபைக்கு இல்லாதிருந்த சொத்துக்கள் தொடர்பாக செலவிடப்பட்ட அபிவிருத்திக் கிரயத்தைக் கணக்கு வைக்கும் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபைக்குச் சொந்தமான காணி மற்றும் விருந்தினர் விடுதி ஏனைய தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், நிதி நிலைமைக்கூற்றில் அது தொடர்பான வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திலிருந்து கிடைக்க வேண்டிய நானாவித கடன்பட்டோர் மீதியாக ரூபா 24,448,523 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் கணக்குகளில் அந்த மீதி ரூபா 18,750,304 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக அதன் பிரகாரம் ரூபா 5,698,219 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் இறுதி இருப்பு மீதி ரூபா 1,974,930 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,597,783 ஆனமையால் ரூபா 377,147 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமாகதாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | முதலீடு | 55,570,268 | முதலீட்டுச் சான்றிதழ் அல்லது மீதி உறுதிப்படுத்தும் ஏனைய எழுத்துமூல சான்றுகள் |
| (ஆ) | கடன்பட்டோர் | 152,421,620 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 2,735,922,843 | நிலையான சொத்துப் பதிவேடு, உரித்துறுதி / உரித்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் |
| | | 2,943,914,731 | |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 5,070,248 தொகை 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 2,633,997 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்டு 4 வருடங்களுக்கு குறைவான காலமாகவும், ரூபா 7,260,519 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்டு 3 வருடத்திற்கு குறைவான காலமாகவும் மற்றும் ரூபா 30,365,685 தொகை வருடமொன்றிற்கு குறைவான காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கி இருந்தன.

(ஆ) கூட்டுமொத்தமாக ரூபா 8,348,414 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 2,888,105 தொகை 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 3,572,047 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்டு 4 வருடங்களுக்கு குறைவான காலமாகவும் ரூபா 1,888,262 தொகை வருடமொன்றிற்கு குறைவான காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கி இருந்தன.

(இ) பாசிக்குடா மலசலகூட சேவையினை பராமரிப்பதற்கான அறவிட வேண்டிய கிடைக்க வேண்டிய ரூபா 6,945,855 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 37,117,725 தொகை வருடமொன்றுக்கு மேற்பட்டு 3 வருடங்களுக்கு குறைவான காலமாகவும் மற்றும் ரூபா 34,032,995 தொகை வருடமொன்றிற்கு குறைவான காலமாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கி இருந்தன.

(ஈ) பாசிக்குடா நீர் பாவனை கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்படவேண்டிய 3 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 3,295,560 தொகையும், வருடமொன்றிற்கு மேற்பட்டு 3 வருடங்களுக்கு குறைவான மீதி ரூபா 5,029,290 தொகையும், வருடமொன்றிற்கு குறைந்த மீதி ரூபா 2,922,314 தொகையும் காணப்பட்டது.

(உ) நானாவித கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 193,181 மீதியில் 3 வருடங்களை விஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 176,063 ஆகும்.

(ஊ) வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்ட ரூபா 40,895,614 பெறுமதியில் ரூபா 6,446,012 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்டு 4 வருடங்களுக்கும் குறைவான காலமாகவும் மற்றும் ரூபா 9,120,936 தொகை 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல்களில் உள்ளடங்கி இருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்தின் 26 பிரிவு | பிரபல்யமான மற்றும் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமொன்றில் மேற்கொள்ளக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றை நிச்சயிக்கும் வகையில் கட்டளை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 169(2) | காசோலைகள் தேறுவதற்கு முன்னர் சேவைகள் வழங்கப்பட்டமையின் காரணமாக ரூபா 585,221 பெறுமதியான 21 காசோலைகளுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 757 | ரூபா 1,880,781 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 757(2) | சொத்துக்களின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 67 பொருட்களின் மிகையும், 133 பொருட்களின் பற்றாக்குறையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.14.1 மற்றும் 9.14.2 ஆம் பிரிவுகள் | மனிதவள முகாமைத்துவத்திற்குரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாக சகல விடயங்களையும் உள்ளடக்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்பான கைநூலொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை அத்தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 373,897,908 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 308,312,524 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 65,585,384 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. குடியகல்வோர் வரி வருமானம் ரூபா 54,166,025 இனாலும், சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 36,651,648 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது நிதி விளைவில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது அது அதிகரித்திருந்தது. எனினும், நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 286,603,801 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 527,420,576 ஆக இருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் வருமானம் ரூபா 678 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் ரூபா 545 மில்லியனாக இருந்தமையால் வருமானத்தில் 24.4 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 236 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 294 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவினத்தில் 24.6 சதவீத அதிகரிப்பை காண்பித்தது.

## 3.3 அதிகாரசபைக்கு எதிராக மற்றும் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------------------

அரசாங்கத்தின் ஆதனங்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் தொடர்பாக அதிகாரசபையினால் 11 வெளிநபர்களுக்கு எதிராக அதிகாரசபையில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் வெளிநிறுவனங்கள் மற்றும் நபர்களினால் நிறுவனத்திற்கு எதிராக அதிகாரசபையில் 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) இலங்கையை, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சுற்றுலா மற்றும் பிரயாணத் தலமொன்றாக அபிவிருத்தி செய்தல்.

(ஆ) சுற்றுலா மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களுக்கு உரியதாக அமைச்சரவையினால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கைகளை உள்ளடக்கி, அந்த துறைகளுக்குரிய சுற்றுலா அலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) சுற்றுலா மற்றும் சுற்றுலாப் பிரயாணத் தலமாக இலங்கையை அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளைச் செய்தல் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்வதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகத்திற்கு வழிகாட்டுதல்.

(ஈ) மனிதவள பயிற்சியளித்தல் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கையேற்றல், இலங்கையின் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு வழிகாட்டுதல்.

(உ) இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பரவலாக்குவதற்கும் பங்களிப்பை வழங்கும் நோக்கில், சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் சுற்றுலா தொடர்பான வியாபாரத் துறைகளை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) சுகாதார சேவைகள் தொடர்பான கைத்தொழில்களை உள்ளடக்கி, போதியளவானதும், கவர்ச்சிகரமானதும் மற்றும் செயற்திறனானதுமான சுற்றுலா சேவையினை வழங்கக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்தலும், மேம்படுத்தலும்.

(எ) சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் அதனை அண்மித்த ஏனைய கைத்தொழில்களுக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்துதல் மற்றும் பேணிச் செய்வதற்காக சுற்றுலாத் தொழில் முயற்சிகளுக்கு அனுமதிபத்திரம் வழங்குதலும், அதிகாரத்தை வழங்கலும்.

(ஏ) சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தலும் அந்த கைத்தொழில் தொடர்பாக மேம்படுத்தல் ரீதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றுவதற்கு தனியார் துறை நபர்களையும் தனிநபர் சபைகளையும் ஊக்குவித்தலும்.

(ஐ) மேற்கூறப்பட்ட நோக்கங்கள் யாவற்றையும் அல்லது அதில் ஏதாவதொன்றை அடைந்து கொள்வதற்காக தேவையான அல்லது சாதகமானதாக ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் உரித்து மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் 04 சுற்றுலா விடுமுறை விடுதிகள் மற்றும் 03 சுற்றுலா விடுதிகள் காணப்பட்டன. அதிக பொது மேந்தலைச் செலவினம் காரணமாக 05 விடுமுறை விடுதிகளிலிருந்து ரூபா 28,848,309 தொகையான பற்றாக்குறை உருவாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சகல விடுதிகளிலிருந்தும் தேறிய நட்டம் ரூபா 3,900,279 ஆக இருந்தது.

(ii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 54 செயற்பாடுகளில் 49 செயற்பாடுகள் அதாவது 91 சதவீதம் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தன. ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 10 சதவீதத்திற்கு குறைவாக செலவிடப்பட்ட 3 செயற்திட்டங்களும், 50 சதவீதத்திற்கு குறைவாக செலவிடப்பட்ட 3 செயற்திட்டங்களும் அவதானிக்கப்பட்டன. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 07 உபாய வழிகளின் கீழ் செயற்திட்டங்களை நிறைவேற்றும் வகையில் ரூபா 687.62 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 355.99 மில்லியன் அதாவது 52 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(iii) 18 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 158.80 மில்லியனில் எந்த தொகையும் செலவிடப்படாதிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 முகாமத்துவ செயற்பாடுகள்

(அ) காணி மற்றும் ஆதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சில வருடங்களுக்கு முன்னர் திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் அதிகாரசபைக்குக் கையேற்கப்பட்ட 510 ஏக்கர் அளவான காணியில் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 50 ஏக்கர் காணி அளவிற்கு குறைவான அளவு மாத்திரமே அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக யால பலட்டுபான வனசீவராசிகள் பிரதேசத்தில் அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்ட 448.3 ஹெக்டேயர் காணியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 26.8 ஹெக்டேயர் காணி மாத்திரமே முதலீட்டாளருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

(iii) தெரிவுப் பரிசோதனைகள் படி 56 விருந்தினர் விடுதிகள் மற்றும் 6,495 ஏக்கர் பரப்பளவான காணியின் 166 கூறுகள் என்பன நிறுவனத்திற்குக் கையேற்பதற்காக வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒரு பகுதி மாத்திரமே கையேற்கப்பட்டிருந்தது.

(ஆ) நுவரெலியா விடுமுறை விடுதியின் திருத்த நடவடிக்கைகளுக்காக ரூபா 1,166,349 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், திருத்த நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பான சான்றிதழொன்று பெறப்படாதிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை நேரடி கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பண்டாரவளை விடுமுறை விடுதி தாபிக்கப்பட்டுள்ள 22 ஏக்கர் 1 றூட் 17.23 பேர்ச் அளவான காணியை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விடுதிக் காணியில் உள்ள அதிக விலையான பெறுமதி கூடிய 200 மரங்கள் அளவில் பொருட் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள 11 ஏக்கர் 03 றூட் 13 பேர்ச் அளவான காணியைக் கைப்பற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 65,104,138 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணி கையளிக்கப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் அதிகாரசபைக்கு அந்தப்பணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் காணியை பாதுகாக்கும் செலவினத்திற்காக ரூபா 843,772 தொகையும் காணியின் எல்லை வேலி, காடு சுத்தம் செய்தல் மற்றும் பெயர்ப்பலகை பொருத்துதல் மற்றும் காணித் திட்டத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 551,155 தொகை அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(உ) பாசிக்குடா விடுமுறை விடுதியின் மலசலகூட முறைமையைச் பேணிச் செல்வதற்காக சேவை வழங்குகின்ற நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் சேவைகளைப் பெற்ற ஹோட்டல்களிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் மாதமொன்றிற்குள் சேவை வழங்குகின்ற நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கூறப்பட்ட சேவைக்காக ஹோட்டல்களிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 78,096,574 மற்றும் சேவை வழங்குகின்ற நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 86,305,593 ஆனமையால் ரூபா 8,209,019 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை.

மேலும், சேவை வழங்குகின்ற நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 95,323,810 தொகை அதிகாரசபையிலிருந்து கிடைக்கவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் செலுத்த வேண்டிய கணக்குகளின் பிரகாரம் அது ரூபா 86,305,593 ஆக இருந்தது. அதன் பிரகாரம், ரூபா 9,018,217 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 செப்தெம்பர் 03 ஆந் திகதி அதிகாரசபையினால் இலங்கை சுற்றுலா நலன்புரிச் சங்கத்திற்கு ரூபா 5,738,075 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. மேற்படி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் பலாங்கொடை, தெஹிஅத்தகண்டி, பதியதலாவ, ஹசலக, லுணுகம்வெஹெர மற்றும்

நுவரெலிய போன்ற பிரதேசங்களில் அமுல்படுத்துவதற்காக அந்தத் தொகையில் ரூபா 4,302,468 செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான ரூபா 1,435,607 இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நலன்புரிச் சங்கத்தின் பொறுப்பில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1969 ஆம் ஆண்டின் போது சுற்றுலா கைத்தொழிலுக்காக இலங்கை சுற்றுலாச் சபைக்கும், பின்னர் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கையளிக்கப்பட்ட பெந்தோட்டை சுற்றுலா விடுமுறை விடுதிக்குரிய 94 ஏக்கர் அளவிலான காணியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 54 ஏக்கர் அளவிலான காணி மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி 46 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணியளவு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதி வளவில் அமைந்துள்ள 2880 சதுர அடி அளவிலான கட்டிடத்தின் நிலப்பரப்பு 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பொருளாதார ரீதியான நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிபில, றாகலை, ஹொரவப்பத்தானை, மஹியங்கனை, வீரகெட்டி, பத்துலுஓயா மற்றும் நிக்கவெரட்டிய போன்ற பிரதேசங்களில் 07 விடுமுறை விடுதிகளுக்காக 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 9,940,380 செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த விடுதிகளை ஆக்கபூர்வமானதாகப் பயன்படுத்தி வருமானம் உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாசிக்குடா சுற்றுலா விடுதி செயற்திட்டத்தில் மழை நீர் வழிந்தோடும் வடிகாண் முறைமையின் நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது உரிய காணியின் பூகோள பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக வடிகாண் முறைமையில் நீர் தேங்கி நின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது கணிப்பிடப்பட்ட உள்ளபடியான அளவை அறிக்கை, பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு அளவுகளுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 3,792,420 தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையில் ''வன்ஸ்டொப்'' முதலீட்டை மேம்படுத்துவதற்காக இணையதளத்தை வடிவமைக்கும் ஒப்பந்தத்திற்குரியதாக ரூபா 699,300 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மைச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த வழங்கல்களுக்கான சிபாரிசுகளுக்கு முரணாக 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெந்தோட்டை மலசலகூட முறைமையை செயற்படுத்தும் ஊழிய ஒப்பந்தம் கொள்வனவு நடைமுறைகளின்றி தனியார் நிறுவனமொன்றிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பாசிக்குடா சுற்றுலா வலயத்தில் தேசிய விடுமுறை விடுதியில் 1.126 கிலோமீற்றர் நுழைவு வீதிக்கு காபட் இடுவதற்காக போலியாக 04 கட்டங்களுக்கு கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்படாமல் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்து நிர்மாணங்களுக்காக ரூபா 22,013,564 மேலதிக தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தத்தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

மேலதிகமாக 4,000 அறைகளுடன் விடுதியை நிர்மாணித்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் ரூபா 5,521 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த கற்பிட்டி ஒன்றிணைந்த சுற்றுலா செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தை 5 வருடங்களில் பூர்த்தி செய்வதற்காக 2008 ஆம் ஆண்டின்போது அமைச்சரவையின் அங்கீகாரமும் பொதுத் திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது அங்கீகாரமும் பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை அமுலாக்கும் திட்டம் மற்றும் செயற்திட்டத்தின் முகாமைத்துவச் செலவினம், மதியுரை மற்றும் மூலதன வேலைகள் போன்றவைகளை மேவுகை செய்யும் வகையில் விரிவானதொரு பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த செயற்திட்டத்தின் கீழ் 14 தீவுகளை முதலீட்டாளர்களுக்காக வழங்குவதற்கு அதிகாரசபையின் கீழ் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 தீவுகள் மாத்திரமே முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) இந்த செயற்திட்டத்தை அமுலாக்குவதற்குரிய கற்பிட்டி மற்றும் தெத்துவ பிரதேசங்களின் காணிகளை கைப்பற்றுவதற்காக அந்த பிரதேசங்களின் பிரதேச செயலகங்களுக்கு 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 71 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணிகள் கைப்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களின் 19 பதவிப் பெயர்களின் கீழ் 218 எண்ணிக்கையான பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை முறையே 177 மற்றும் 180 ஆக இருந்தன.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் பணிகள் நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட செயல் முன்னேற்றத்தை காலரீதியாக பரீட்சிப்பதற்கான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 18 விடயங்களில் கணக்காய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் 11 விடயங்களில் கணக்காய்வு இடம்பெறவில்லை.

**5.3 பெறுகைகள் திட்டம்**

2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) இன் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் 23 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 20 சதவீதம் முதல் 368 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை இதுவரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை.

**5.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 1 ஆம் அத்தியாயத்தின் 12(4)(iii) ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அமைச்சரின் அங்கீகாரமின்றி தனியார் ஹோட்டலொன்றிற்கு அரச வங்கியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன் தொகைகளுக்குரிய 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை வட்டியாக ரூபா 7,382,305 தொகை அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கற்பிட்டி துறையடி இறங்குதுறையை நிர்மாணித்தல் மற்றும் வன்னிமுந்தலம் களப்பு அருகிலுள்ள வீதிக்கு தார் இடுவதற்காக கருங்கல், கிறவல் மற்றும் ஏ.பீ.சீ வழங்கல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ், கருங்கல் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்குப் பதிலாக செயற்திட்டப் பணிப்பாளரின் விருப்பத்தின் படி வேறு நபரொருவரிடமிருந்து 1648 கியூப் கருங்கல் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 824,000 கூடுதலான தொகையொன்றைச் செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன், அந்தப் பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கற்பிட்டி வேலைத்தளத்திற்கு கருங்கல், கிரவல் மற்றும் ஏ.பீ.சீ வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட டிபர் வாகனமொன்றின் கொள்ளளவு 3 கியூப் ஆக இருந்த போதிலும் 4 கியூப் படி பொருட்கள் வழங்கியதாகக் கருதி கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,549,000 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1648 கருங்கல் கியூப், 368 கியூப் ஏ.பீ.சீ மற்றும் 40 கியூப் கிரவல் என்பன அதிகாரசபையால் பௌதீக ரீதியில் கையேற்கப்படாத பொருட்களின் பெறுமதியான ரூபா 10,196,000 தொகைக்காக அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) கதிர்காமம் சுற்றுலா விடுமுறை விடுதியில் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 11,089,228 தொகையை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கற்பிட்டி மொஹட்டுவாறம இறங்குதுறை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக டோசர் இயந்திரம் வழங்கப்பட்டதாக வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கடிதங்களையும் அடிப்படையாகக் கொண்டு 941.7 மணித்தியாலங்களுக்காக ரூபா 3,226,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த டோசர் இயந்திரத்தின் சேவை பெறப்பட்டமைக்கு தினந்தோறும் மாணி வாசிக்கப்பட்டு வேலை மணித்தியாலம் பதியப்பட்டு அந்த வேலை மணித்தியால அறிக்கை அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவரினால் உறுதிப்படுத்தப்படாமல் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் வேலைப் பரிசோதகரினால் உழவு இயந்திர சேவை திருப்திகரமாக பெறப்பட்டதாக மேற்கூறப்பட்ட மூன்று கடிதத்திலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) பெந்தோட்டை விடுதி முகாமையாளரினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 65½ சம்பளமற்ற விடுமுறைகள், பெறப்பட்டு முகாமைத்துவத்திற்கு அறிவிக்காது அந்த இரண்டு வருடங்களின் போதும் சேமிக்கப்பட்ட விடுமுறை படியாக ரூபா 80,960 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) பெந்தோட்டை விடுதி முகாமையாளரினால் போலியான இலக்கமொன்றைக் குறிப்பிட்டு வாகனமொன்றிற்காக ஒரு வருடகாலத்தில் இரண்டு நிறுவனங்களின் வாகன வாடகையாக ரூபா 480,000 மற்றும் எரிபொருளுக்கு ரூபா 128,226 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 608,226 தொகை சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்குப் புறம்பாக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபையினால் தேவையினை மதிப்பிடாமல் 55 சோபா கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,659,875 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்கு வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் மாதிரி கதிரைகள் வழங்கிய நிறுவனத்திலிருந்து கூறுவிலை பெறப்பட்டிருக்கவில்லை. கதிரைகள் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவிற்கு முரணாக முற்பணமாக மொத்த வழங்கல் பெறுமதியில் 50 சதவீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் கதிரைகளைப் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 211,000 பயனற்ற செலவினமும் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 159,803 பெறுமதியான 03 கதிரைகள் காணாமல் போயிருந்தன.

(ஏ) அமெரிக்க ஐக்கிய குடியரசின் 30 மில்லியன் டொலர்களை விஞ்சிய செயற்திட்டமொன்றாக கற்பிட்டி ஒன்றிணைந்த சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம் வகைப்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டமையினால் 2009 முதல் 2011 வரை உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,780,253 தொகையான பணத்தை அதிகாரசபைக்கு அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பில் அமைந்துள்ள கலாசார நிலையக் கட்டிடத்தில் (Dutuch Hospital) பெறுமானத்தேய்வு ஏற்பாடு கழிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 7,274,715 தொகை குறைவாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) செயற்பாட்டு நிர்வாகம் | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளல் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கையிடல் என்பவற்றுக்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாமை. |
| (ஆ) செயற்திட்டக் கட்டுப்பாடு | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவுகளை சிபாரிசு செய்யும் போதும் அங்கீகரிக்கும் போதும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை பரீட்சிக்கப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை மற்றும் சொத்துக்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கட்டுப்பாடு | செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (உ) கணக்கீடு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படும் போது வழுக்களுடன் காணப்பட்டமை, கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தாமை மற்றும் மூலதனச் சொத்துக்களை கணக்கு வைத்தல் என்பன உரிய மூல ஆவணங்கள் இன்றி கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |